**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 12 (4) மற்றும் 8 ஆவது பிரிவு பிரகாரமும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, ஆணைக்குழுவின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து ஆணைக்குழுவின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை ஆணைக்குழுவின் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வெள்ளப்பெருக்கு இடர்களை எதிர் நோக்கிய பல்கலைக்கழக பணியாற்தொகுதியின் பொருட்டு நிவாரணம் வழங்குவதற்காக திறைசேரியால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கி-யிருந்த வெள்ளப்பெருக்கு நிவாரண தொகையில் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு மீள அறவிடப்பட்ட ரூபா. 26,566,366 தொகையை நிதியக் கணக்-கொன்றில் வரவு வைக்கப்ப-ட்டிருந்தது. அதன்படி அந்த தொகை கடந்த காலத்திற்கு சீராக்குவதற்குப் பதிலாக மீளா-ய்விற்கான ஆண்டில் வருமா-னமாக கணக்கிடப்பட்டிருந்த-மையால், அத் தொகையால் ஆண்டின் வருமானம் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெள்ளப்பெருக்கு நிவாரணம் வழங்கப்பட்டு மீண்டும் அறவிடப்படும் பணத் தொகையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு-வின் மீண்டுவரும் செலவின-ங்களுக்கு பயன்படுத்திய-துடன், அது வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் வருமானமாக எடுக்கப்பட-வில்லை. ஆயினும் 2019 ஆம் ஆண்டில் அதனை மீண்டு-வரும் வருமானமாக வருமா-னக் கணக்கில் வரவு வைத்து கணக்கு குறிப்புகளை செவ்வையாக்கப்பட்டது. | ஆணைக்குழுவின் வருமானக் கூற்று தயாரிக்கையில் காலப் பகுதிக்கு ஏற்புடை-யதான வருமானம் மட்டும் கவனத்தில் கொள்ளப்பட்டது. |
| (ii) | மீளாய்விற்ான ஆண்டில் திறைசேரியால் வழங்கியருந்த ஒதுக்கீடுகளில் இருந்து, அந்த ஒதுக்கீடுகள் வழங்கியிருந்த நோக்கத்திற்கு புறம்பாக பட்டநிலை பின்படிப்பு நிறுவன-த்திடம் வழங்கியிருந்த 2 மில்லியன் ரூபா ஆன முற்பணத் தொகையினை, அறவிடப்பட வேண்டிய முற்பண-த்தின்கீழ் நிதிக் கூற்றுகளில் காண்பிப்பதற்குப் பதிலாக ஆணைக்குழுவின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த வரவு செலவு திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு-விடம் கிடைக்கப்பெறும் மொத்த ஒதுக்கீடுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 100 (2) பிரிவின்படி பல்கலை-க்கழக மானியங்கள் ஆணை-க்குழுவிடம் உள்ள அதிகார-ங்களின் பிரகாரம் செலவு தலைப்பு இலக்கம் 214 இன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவு ஒதுக்கீடுகளின்கீழ் இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஏனைய நிறுவனங்க-ளிடம் முற்பணமாக வழங்கியுள்ள பணத் தொகையினை ஆண்டு இறுதியில் சீராக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள கிடைக்கப்பெற வேண்டிய ரூபா.895,619 ஆன மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | ரூபா.893,271 ஆன கிடைக்கப்பெற வேண்டிய மீதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிகளின் பொருட்டு உயர் கல்வி வளாகத்தில் பொருத்தப்பட்ட வளி சீராக்கி இயந்திரங்களின் பெறுமதியாவதுடன், அந்த இயந்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம மீள பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>ரூபா.2,348 ஆன மீதி மொறட்டுவை பல்கலைக்கழகத்திடம் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலரிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியுள்ளது. | உரிய கிடைக்கப்பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தம் ரூபா ரூ.2,959,883 ஆன மீதி பல ஆண்டுகளாக சீராக்குவறத்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பொருட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலும் உறுதிப்பாடுகளை பெற்றுக்கொண்டு அந்த மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | விரைவாக சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 03 பல்கலைக்கழகங்களிடம் கணினி மென்பொருள் தாபிப்பதற்காக வழங்கியிருந்த ரூபா.10,253,750 ஆன முற்பணம் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் சீராக்கப்படவில்லை. | மென்பொருள் முறைமைகளில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் காணப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் உரிய வகையில் இற்றைப்படுத்த வேண்டுமென்பதுடன், எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>மகாபொல புலமைப் பரிசில் நிதியத்திற்கான மென்பொருள் முறைமை மகாபொல பொறுப்பு நிதியத்தை தொடர்புபடுத்திக்கொண்டு துரிதமாக தீர்ப்பதற்கு எதிர்வருங் காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய கடமைகளை ஏற்புடையவாறு நிறைவேற்றிக்கொண்டு முற்பணம் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| பலக்லைக்கழக நிறுவனங்கள் கோவையில் III அத்தியாயத்தின் 18.1 பிரிவு | ஆணைக்குழுவில் நீண்டகாலமாக பிரதான 08 பதவிகளில் நிலவிய வெற்றிடங்களை மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நிரப்பு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 1978 பல்கலைக்கழக சட்டத்தில் 8 ஆவது பிரிவின் அதிகாரங்கள் பிரகாரம் தேவையான ஊழியர்களின் எண்ணி-க்கை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பாக தீர்மானிக்கப்படுவதுடன், அதற்கமைய தற்போது கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்பட்டுள்ளது. தேவை கருதி எதிர் காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆணைக்குழுவின் அலுவல்களை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியில் உள்ள வெற்றிட-ங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.12,267,136 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டில் மிகை ரூபா.74,704,144 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.62,437,008 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு காரணங்களாக வருமானம் குறைவடைதல் மற்றும் சம்பளம், வேதனம் மற்றும் பணியாற் தொகுதியின் நலன்களுக்கான செலவினம் அதிகரித்தல் காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நாடளாவிய மட்டத்தில் நடாத்-தப்படும் கல்வி பொது தரா தர சான்றிதழ் உயர்தர பரீட்சையில் தோற்றி அதிகூடிய Z பெறுமதி-யினை பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகள் பல்கலை- | தகவுத்திறன்/ செய்முறை பரீட்-சைகள் தொடர்பில் உள்ள பல்வேறு பிரச்சினைகளுடன்-கூடிய நிலைமைகள் காரண-மாக 2019/2020 கற்கை ஆண்டு தொடக்கம் க.பொ.த(உ.த) பரீ- | நாடளாவிய மட்டத்தில் நடாத்தப்படும் போட்யுட-ன்கூடிய பரீட்சை பெறு-பேறுகளின்மீது பல்கலை-க்கழகத்தில் உள்வாங்கு-வதற்கு முகாமைத்துவம் கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | க்கழகத்தில் உள்வாங்குவதற்காக நடாத்தப்படும் தகவுத்தறின் பரீட்சையில் சித்தியடாமை காணரமாக க.பொ.த (உ.த) பரீட்சையில் அதிகூடிய Z பெறுமதி பெற்றிருப்பினும், விருப்பம் தெரிவித்த கற்கைநெறியில் உள்வாங்குவதற்கோ பல்கலை-க்கழகத்தில் இணைவதற்கோ கிடைக்கப்பெற்றிருந்த வாய்ப்பு இல்லாது போகும் நிலைமை அவதானிக்கப்பட்டது. ஆயினும், மேலும் இந்த முறை திருத்தம் செய்தல் அல்லது இடைநிறு-த்தல் என்பவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், 2019/2020 கல்வி ஆண்டிலும் பல்கலைக்கழகத்-திற்கு மாணவர்களை உள்வா-ங்குகையில் தகவுத் திறன் பரீட்சை நடாத்தும் செயற்பாடு மேலும் பின்பற்றுவதற்கு நடவ-டிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்குவதற்காக மாணவர்களை தெரிவு செய்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டிருப்பினும், பல்வேறு தரப்புகளின் அதிகமான வேண்டுகோளின்படி அந்த பரீட்சைகளை மேலும் 02 ஆண்டுகளின் பொருட்டு மட்டும் நடாத்துவதற்கு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படும் புதிய கற்கைநெறிகளின் பொருட்டு இந்த பரீட்சைகளை உள்ளடக்காதிருப்பதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செலுத்தல் வேண்டும். |
| (ii) | பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை உட்சேர்க்கும் தரவுகளி-ன்படி 15 பல்கலைக்கழகங்களில் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகை-யில் 2018 ஆம் ஆண்டில் அதாவது 10 ஆண்டுகளுள் உள்வாங்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 19,620 தொடக்கம் 29,863 வரை அதாவது 52% ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டாலும், கடந்த 05 ஆண்டு காலப் பகுதிக்குள் மூலதன மற்றும் மீண்டுவருஞ் செலவினங்களின் பொருட்டு பொது திறைசேரி அளிப்புகள் ரூபா.மில்லியன் 198,681 தொகையும் உழைக்கப்பட்ட நிதி ரூபா.மில்லியன் 320,645 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களில் பேணிச் செல்கின்ற கற்கைநெறிகளின் பொருட்டு மாணவர்களை உள்வாங்குகை-யில் கவனிக்கத்தக்க செயலாற்-றுகை மட்டத்தை அடைந்துக்கொள்ளவில்லை என்பதுடன், கடந்த 10 ஆண்டுகளில் 03 பல்கலைக்கழகங்களில் எந்தவொரு கற்கைநெறியையும் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்கின்ற எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுகளிலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், அதன்படி 2019/2020 கற்கை ஆண்டுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை 34,161 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் (31,158) 9.64 % அளவிலான அதிகரிப்பாகும். உரிய சந்தை ஆய்வுகளை மேற்கொண்டு பல்கலைக்கழகத்தால் புதிய கற்கை நெறிகளுக்கான பாடவிதானங்களை அடையாளம் காணப்பட்டு அதற்கான பாடவிதானங்களை அபிவிருத்தி செய்து, தேவைப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்து புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தல் வேண்டும். | பல்கலைக்கழகங்களின் பொருட்டு வருடாந்தம் செலவிடப்படும் நிதியங்களுடன் ஒப்பிடுகையில் இயன்ற வரை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும், புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பகடிவதை குறைப்பதற்காக தாபிக்கப்பட்ட Centre for Gender Equity and Equality பிரிவிடம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 200-250 இற்கு இடையிலான எண்ணிக்கை ஆயினும், சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் முன்வைக்கப்பட்டு அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. ஆயினும் அந்த காலப் பகுதிக்குள் ரூபா. மில்லியன் 27 இற்கு அண்மித்த தொகை இந்தப் பிரிவின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருப்பினும், செயலாற்றுகை மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இந்த மையத்திடம் கிடைக்கப்பெற்ற எல்லா முறைப்பாடுகளுக்கும் உரிய செயற்பாடுகள் சட்டத்துடனான சட்டகத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் ஏற்பட்ட நிலைமையும், செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் இடம்பெற்ற கல்விசாரா ஊழியர்களின் பணிபகிஷ்கரிப்பும் ஏனைய நடைமுறை பிரச்சினைகள் காரணமாகவும் இந்த மையத்தின் செயற்றிட்டத்தில் இருந்த பால் சமத்துவம் (ஆண்/ பெண்) நியாயம் தொடர்பான நிலையான குழுவின் தீர்மானங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாத நிலைமை இருந்தமை இத்தால் அறியத் தருகின்றேன். | உரிய நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பட்டநிலை பின்படிப்பு அளிப்பு பெறுநர்கள் 03 ஆண்டுகளுக்குள் தமது பட்டப் படிப்பை உரயிவாறு பூர்த்தி செய்தல் வேண்டுமாயினும், 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை பட்டநிலை பின்படிப்பு அளிப்புகள் வழங்கிய 204 அளிப்பு பெறுநர்களுக்கு ரூபா.190,367,674 அன அளிப்பு வழங்கியிருப்பினும், பட்ட நிலை பின்படிப்பு பட்டம் பூர்த்தி செய்த பட்டதாரிகளின் எண்ணிக்கை 119 அல்லது 58% போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதேபோன்று பட்டப் படிப்பை பூர்த்தி சயெ்ததாக குறிப்பிட்டிருந்த 14 பட்டதாரிகளின் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், தமது முன்னேற்றம் தொடர்பாக பதில் நடவடிக்கை எதுவும் வெளிப்படுத்தாத 04 பட்டதாரிகள் | 2009 ஆம் அண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை தமது பட்டப் படிப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்தாத அளிப்பு பெறுநர்கள் பொருட்டு நினைவூட்டல் கடிதங்கள் வழங்கியுள்ளதுடன், அதற்கு பதில் நடவடிக்கையாக 32 அளிப்பு பெறுநர்கள் தமது பட்ட நிலை பின்படிப்பை முடிவுறுத்தி அந்த சான்றிதழ்களை எம்மிடம் வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய அளிப்பு பெறுநர்கள் தமது பட்டநிலை பின் படிப்பு பட்டங்களுக்கான நடவடிக்கைகளை முடிவுறுத்தி ஆய்வு கட்டுறைகளை ஒப்படைக்கப்பட்டதற்கான சான்று கடிதங்களை சமர்ப்பித்- | அளிப்பு பணத்தினை பெற்றுக்கொண்ட பட்டநிலை பின்படிப்பு பெறுநர்கள் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் கற்கைநெறிகளை உரியவாறு முடிவுறுத்துகின்றார்களா என்பதற்கு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| உள்ளார்கள் என்று 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை பட்டநிலை பின்படிப்பு பூர்த்தி செய்வதன் முன்னேற்றத்தை பரிசோதனை செய்கையில் அவதானிக்கப்பட்டது. | துள்ளனர். அதன்படி 2020.07.15 திகதியில் 119 அளிப்பு பெறுநர்கள் பட்டப் பின்படிப்பு பட்டங்களை பூர்த்தி செய்துள்ளனர். |

## 3.3 நிதியங்களின் குறை பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பல்கலைக்கழகங்களின் கற்கை-நெறிகள் மற்றும் தாபனத்துட-னான மீளாய்வு நடவடிக்கை-களின் பொருட்டு, திரட்டியிருந்த மீளாய்விற்கான ஆண்டின் இறுதி திகதியில் ஆணைக்குழுவின் அபிவிருத்தி நிதியத்தில் நிலவிய ரூபா.39,129,376 மற்றும் செலுத்-தப்பட வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா.30,583,530 ஆன மீதி மீளாய்விற்கான ஆண்டில் மீளா-ய்வு நடவடிக்கைகளின் பொருட்டு உபயோகப்படுத்துவதற்கு அல்-லது சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் உழைக்கப்பட்ட ரூபா. மில்லி-யன் 30.3 ஆன தொகை அந்த ஆண்டில் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களு-க்காக பயன்படுத்தியதுடன், மீளாய்விற்கான ஆண்டில் வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் மிகை காண்பிக்க-ப்பட்டதால் இந்த ஆண்டில் நிதியத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது. ஆயினும் செயற்பாட்டு மூலதன தேவை-களின் பொருட்டு பயன்படுத்த-ப்பட்டது. | மீளாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பெற்றுக்கொண்-டுள்ள நிதியங்களின் மீதி-யை உரிய நோக்கங்களின் பொருட்டு உபயோகப்படு-த்தல் அல்லது சீராக்கு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | அன்பளிப்பு மற்றும் புலமைப் பரிசில் நிதியத்தின்கீழ் 12 நிதியங்களில் இருந்த ரூபா. மில்லியன் 32.9 ஐ கொண்ட மீதிகளில் 08 நிதியங்களில் இருந்த ரூபா.மில்லியன் 30.1 ஐ அல்லது 91.4% மீளாய்விற்கான ஆண்டில் நிதியம் தாபிக்கும் நோக்கமான புலமைப் பரிசில் அளிப்புகளுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை. | UGC திறந்த புலமைப் பரிசில் நிதியம் (UGC Open Scholarship) மற்றும் பல்கலைக்கழக புலமைப் பரிசில் நிதியம் (Universities Scholarship Fund) 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதியத்திடம் மாற்றப்பட்டது. | நிதியம் தாபிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தல் வேண்டும். |